வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 20.5.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 49 தொகுதிகளில், ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது.

இந்திய வங்கித் துறையின் நிகர லாபம், முதல் முறையாக 3 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி, அதிகரித்து இருப்பதை, பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

3 புதிய குற்றவியல் சட்டங்களை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட பொது நலன் மனுவை விசாரணைக்கு ஏற்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஐந்தாம் கட்டம்

6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 49 தொகுதிகளில், ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது. இன்றைய தேர்தலில் பிற்பகல் 3 மணி நிலவரப்படி, சுமார் 48 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. உத்தரபிரதேசத்தில் இன்று

தேர்தல் நடைபெற்ற 14 மக்களவைத் தொகுதிகளில், பிற்பகல் 3 மணி வரை, 48 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. மகாராஷ்டிர மாநிலத்தின் 13 தொகுதிகளில், 39 சதவிகித வாக்குகளும், மேற்குவங்கத்தின் 7 தொகுதிகளில், 63 சதவிகிதம், ஒடிசா மாநிலத்தின் 5 தொகுதிகளில், 49 சதவிகிதம், பீகார் மாநிலத்தின் 5 தொகுதிகளில், 45 சதவிகிதம், மற்றும், ஜார்கண்ட் மாநிலத்தின் 3 தொகுதிகளில், 54 சதவிகித வாக்குகளும் பதிவாகி இருந்தன. இறுதி வாக்குப் பதிவு சதவிகிதம் பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

*மோடி-ஒடிசா*

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி, தேர்தல் பிரச்சாரத்தின் ஒருபகுதியாக இன்று ஒடிசா மாநிலம் புரியில் மாபெரும் சாலை பவனி நடத்தினார். முன்னதாக புரி ஜெகன்னாதர் கோவிலில் அவர் வழிபட்டார். இன்றைய தினம் தென்கனால், கட்டாக் ஆகிய மக்களவை தொகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் திரு நரேந்திர மோடி உரையாற்றினார். தொடர்ந்து மேற்கு வங்க மாநிலம் ஜார்கிராமிலும் அவர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இதற்கிடையே, ஒடிசா முதலமைச்சரும், பிஜு ஜனதா தளத்தின் தலைவருமான திரு நவீன் பட்நாயக் இன்று புவனேஸ்வரில், கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக சாலை பவனி நடத்துகிறார். இந்த எல்லா தொகுதிகளிலும், வரும் 25-ஆம் தேதி 6-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலின் ஒரு பகுதியாக தேர்தல் வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

டெல்லி

6-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலின் ஒருபகுதியாக வரும் 25-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள டெல்லி தலைநகர பிரதேசத்தில், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா தெற்கு டெல்லியின் சங்கம் விகார் பகுதியிலும் பிஜேபி தேசிய தலைவர் திரு ஜேபி நட்டா, புதுடெல்லி மக்களவைத் தொகுதியின் மாளவியா பகுதியிலும் இன்று சாலை பவனி நடத்துகிறார்கள். வடகிழக்கு டெல்லி மற்றும் வடமேற்கு டெல்லி தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்கள், பல்வேறு இடங்களில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்று டெல்லியில், திரு கிரிராஜ் சிங் உள்ளிட்ட மூத்த பிஜேபி தலைவர்களும், மூத்த காங்கிரஸ் தலைவர் திரு சச்சின் பைலட், டெல்லி முதலமைச்சரும் ஆம்-ஆத்மி கட்சியின் அமைப்பாளருமான திரு அரவிந்த் கேஜரிவால் ஆகியோரும், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

மோடி-பேட்டி

இந்திய அரசியல் சாசனத்தை காங்கிரஸ் அவ்வப்போது அவமதித்து வந்திருப்பதாக பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார். இன்று புதுடெல்லியில் தூர்தர்ஷன் தொலைக் காட்சிக்கு பேட்டி அளித்த அவர் டீக்கடைக்காரர் கூட பிரதமராக முடியும் என்பதே இந்திய அரசியல் சாசனத்தின் சிறப்பு என்றும், இத்தகைய அரசியல் சாசனத்தை உருவாக்கி தந்த அண்ணல் அம்பேத்கார் மற்றும்

அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் மீது தாம் மிகுந்த மரியாதை வைத்திருப்பதாகவும் கூறினார். தம்மைப் பொறுத்தவரை, அரசை எப்படி நடத்திச் செல்ல வேண்டும் என்பதற்கு வழிகாட்டும் சுடராகவே, அரசியல் சாசனத்தை தாம் கருதுவதாக அவர் தெரிவித்தார். ஒடிசா, ஜார்கண்ட், பீகார், வங்காளம், கிழக்கு உத்தரபிரதேசத்தை உள்ளடக்கிய கிழக்கிந்தியா விரைவிலேயே, நாட்டின் வளர்ச்சிக்கான உந்து சக்தியாக மாறும் என்று பிரமதர் தெரிவித்தார். இந்திய மகளிர் சக்தியின் உள்ளாற்றல் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் பொருளாதாரத்தை முற்றிலுமாக புரட்டிப் போடும் உள்வலிமை பெண்களுக்கு உண்டு என்றும் அவர் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, செய்தி ஏஜன்சி ஒன்றுக்கும் பேட்டி அளித்தார். சிறுபான்மையிருக்கு எதிராக தாம் ஒரு வார்த்தை கூட பேசியது இல்லை என்று அவர் கூறினார். ஆயினும் காங்கிரஸ் கட்சியின் ஓட்டு வங்கி அரசியலை தாம் எதிர்ப்பதாக அவர் தெரிவித்தார். அண்ணல் அம்பேத்கார், பண்டித நேரு போன்ற அரசியல் சாசன சிற்பிகள், மதரீதியில் இடஒதுக்கீடு வழங்க கூடாது என்றே முடிவு செய்து இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

*மோடி-பீகார்*

பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி, இன்று மாலை 2 நாள் பயணமாக பீகார் செல்கிறார். பட்னாவில், மறைந்த, மூத்த பிஜேபி தலைவர் சுசில்குமார் மோடியின் இல்லத்திற்கு அவர் நேரில் சென்று அஞ்சலி செலுத்துகிறார். மாநில பிஜேபி தலைமையகத்தில் கட்சித்

தொண்டர்களையும், அவர் சந்திப்பதாக பிஜேபி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இரவு பட்னா ராஜ்பவனில் தங்கிய பின்னர் நாளை, சிவான், கிழக்கு சம்பரான் ஆகிய 2 மக்களவைத் தொகுதிகளில் அவர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

மோடி-லாபம்

2024-ஆம் நிதியாண்டில் இந்திய வங்கித் துறையின் நிகர லாபம், முதல் முறையாக 3 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி, வங்கித் துறையின் நிதி ஆரோக்கியத்தில் குறிப்பிடத் தகுந்த திருப்பம் ஏற்பட்டுள்ளதை, பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். பொதுத் துறை மற்றும் தனியார் துறையின் வங்கிகளின் நிகர லாபம், கடந்த நிதியாண்டின் 2.2 லட்சம் கோடி ரூபாய் என்னும் அளவில் இருந்து, 3.1 லட்சம் கோடி ரூபாயாக, 39 சதவிகிதம் அதிகரித்துள்ளது. பொதுத் துறை வங்கிகள், இந்த நிதியாண்டில், 1.4 லட்சம் கோடி ரூபாய் நிகர லாபம் ஈட்டி உள்ளன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 34 சதவிகிதம் அதிகமாகும். தனியார் துறை வங்கிகளின் நிகர லாபம், 42 சதவிகிதம் அதிகரித்துள்ளது. வங்கித் துறையின் ஆரோக்கியம் இவ்வாறு மேம்படுவதால், நாட்டில், ஏழைகள், விவசாயிகள், மற்றும், சிறு-குறு-நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கடன் வசதிகள் அதிகரிக்கும் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மோடி-இரங்கல்

ஈரானிய அதிபர் சையது இப்ராஹீம் ரைசியின் துயரகரமான மறைவு குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி அதிர்ச்சி வெளியிட்டுள்ளார். இந்தியா- ஈரான் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் டாக்டர் ரைசியின் பங்களிப்புகள், எப்போதும் நினைவில் கொள்ளப்படும் என்று சமூக ஊடகப் பதிவில் அவர் தெரிவித்துள்ளார். துயரகரமான இந்த நேரத்தில், இந்தியா, ஈரானுக்கு துணை நிற்பதாக பிரதமர் மேலும் கூறி உள்ளார். வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ஈரானிய அதிபரும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சரும் விமான விபத்தில் காலமானது துயரகரமானது என்று கூறி உள்ளார். மறைந்த தலைவர்களை அண்மையில் கடந்த ஜனவரி மாதம் தாம் சந்தித்ததை அவர் நினைவு கூர்ந்துள்ளார்.

குற்றவியல் சட்டம்

3 புதிய குற்றவியல் சட்டங்களை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட பொது நலன் மனு ஒன்றை விசாரணைக்கு ஏற்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. மனுவை தள்ளுபடி செய்யவே வாய்ப்புக்கள் அதிகம் என்று நீதிபதி திருமதி பேலா திரிவேதி தலைமையிலான விடுமுறைக்கால பெஞ்ச் இன்று ஆரம்பத்திலேயே கூறி விட்டதைத் தொடர்ந்து மனுவை விலக்கிக் கொள்ள அனுமதிக்கமாறு மனுதாரர் வேண்டுகோள் விடுத்தார். இதைத் தொடர்ந்து, வாபஸ் பெறப்பட்ட மனுவாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

வானிலை

தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த 3 நாட்களுக்கு அநேக இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில், மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் மாவட்டங்கள், மற்றும், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கும், நீலகிரி முதல் தேனி வரையிலான மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 22-ஆம் தேதி வாக்கில் தென்கிழக்கு வங்க கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என்றும், இது, வடகிழக்கு திசையில் நகர்ந்து, வரும் 24-ஆம் தேதி வாக்கில், மத்திய வங்க கடலில் காற்றுழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை வாய்ப்பை கருத்தில் கொண்டு, தேசிய பேரிடர் மீட்புப் படையின் 4 அணிகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 24 மணி நேர கண்காணிப்பு மற்றும் உதவி மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும் ஏற்கனவே கடலுக்குள் சென்றுள்ள மீனவர்கள் உடனடியாக கரை திரும்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராமனாதபுரம் மாவட்டம் கமுதியில் 12 சென்டிமீட்டரும், மதுரை தல்லாகுளத்தில் 11 சென்டிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 2 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

கோவேக்சின்

கொரோனா தொற்றுக்கு எதிரான கோவாக்சின் தடுப்பூசியின் பக்க விளைவுகள் பற்றிய, பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் ஆய்விற்கும், தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. இந்த ஆய்விற்கு நிதி அல்லது தொழில் நுட்ப ரீதியில் உதவி எதையும் தாங்கள் வழங்கவில்லை என்று, ஐசிஎம்ஆர் தலைமை இயக்குநர் டாக்டர் ராஜீவ் பஹல் தெரிவித்துள்ளார். இந்த ஆய்வறிக்கை வெளியாகி உள்ள மருத்துவ இதழில் இருந்து அதை உடனடியாக நீக்க கோரி, மருத்துவ இதழ் நிர்வாகத்திற்கும், சம்பந்தப்பட்ட ஆய்வாளருக்கும் அவர் கடிதம் எழுதி உள்ளார். தடுப்பூசி போட்டு கொண்டவர்களுக்கு ஏற்பட்டதாக ஆய்வறிக்கையில் கூறப்படும் பிரச்சனைகளுக்கும் தடுப்பூசிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவருக்கு இந்த பிரச்சனைகள் இருக்கவில்லையா என்பது குறித்து ஆய்வறிக்கையில் பேசப்படவே இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 49 தொகுதிகளில், ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது.

இந்திய வங்கித் துறையின் நிகர லாபம், முதல் முறையாக 3 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி, அதிகரித்து இருப்பதை, பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

3 புதிய குற்றவியல் சட்டங்களை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட பொது நலன் மனுவை விசாரணைக்கு ஏற்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------------